# <u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

*மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019—ன்படி 1920—ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B—ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.11.12.2020 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.*

*நகராட்சி அலுவலகம்*
*நாள்: 11.12.2020*

*தனி அலுவலர் மற்றும்*
*ஆணையாளர்*
*ஒட்டன்சத்திரம் நகராட்சி*

**பொருள் : 1**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4087/2020/அ5 நாள்.22.10.2020–ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2020–2021–ம் நிதியின் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் 1–வது வார்டு சங்குப்பிள்ளை புதூரில் சமுதாயக்கூடம் கட்டும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், மதுரை அவர்களின் செயல்முறை ந.க.எண்.3485/2020/பி2, நாள்.11.11.2020–ம் நாளில் தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி பணிக்கு 03.12.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. பி.வேலுச்சாமி | 0.02 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன் | 0.63% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்.1–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவர் 0.02% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவரின் 0.02 மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1027/2020/இ1)

**தீர்மானம் எண் – 278**

**பொருள் : 2**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ள இந்நகராட்சி செயல்முறை ஆணை உத்திரவின்படி, களப்பணியாளர்களுக்கான ஒப்பந்த காலம் 30.11.2020–ம் நாளுடன் முடிவுறுவதால், 01.12.2020 முதல் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள தற்போது கொரோனா பேரிடர் காலம் என்பதால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி, இவ்வலுவலக நகர்மன்ற தீர்மான எண்.222, நாள்.30.09.2020–ன்படி, பழைய ஒப்பந்ததாரரான திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவருக்கு, மேலும் இரண்டு மாதங்களுக்கு தற்போதைய விலை விகிதத்திலேயே (ரூ.296 + 22.85% நிர்வாக கட்டணம்) ரூ.364/–க்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது மேற்படி பழைய ஒப்பந்த நிறுவனமே 15.10.2020–ம் தேதிய விண்ணபப்பத்தில் தற்போதைய விலை விகிதத்திலேயே (ரூ.296 + 22.85% நிர்வாக கட்டணம்) ரூ.364/–க்கு, மேலும் ஓராண்டுக்கு பணியாட்களை சப்ளை செய்ய இசைவு தெரிவித்ததன் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கான ஒப்பந்த காலத்தினை ஏற்கனவே உள்ள விலை விகிதத்தில் (ரூ.296 + 22.85% நிர்வாக கட்டணம்) ரூ.364/–க்கு மேலும் ஓராண்டுக்கு 01.12.2020 முதல் 30.11.2021 வரை நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50.00 இலட்சம் தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி, மேற்படி டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை அத்தியாவசிய பணி என்பதால், பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 279**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலை திட்டம் 2020–21–ன் கீழ் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020–ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| ஒட்டன்சத்திரம் | 3.00 | 2.70 | 0.30 |

எனவே, மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் கீழ்க்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | காந்திநகர் நகர் மெயின் தெற்கு பகுதி, தோட்டத்து சாலை, காந்தி மார்க்கெட் மெயின் சாலை, காந்தி மார்க்கெட் முதல் மற்றும் இரண்டாவது குறுக்கு சாலை, இ.பி. நகர் மெயின் மற்றும் குறுக்கு தெரு, பொன்னகரம் தார்சாலை, அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண்.5, 8, 9, 10, 18) | 2.40 | 5.00 | 200.00 |
| 2. | தாராபுரம் மெயின் சாலை பி.என்.கே மண்டபம் முதல் செக்போஸ்ட் (நாகணம்பட்டி பைப்பாஸ் சாலை) வரை தார்ச்சாலையாக அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண்.1, 2, 3) | 1.05 | 8.00 | 100.00 |
| | மொத்தம் | 3.45 | | 300.00 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 280**

**பொருள் : 4**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.11/செமதொ/2020 நாள்.27.07.2020, 13.08.2020, 14.08.2020 மற்றும் 21.08.2020–ன் பேரில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசின் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளை நான்காண்டு சாதனை மலராக கீழ்க்காணும் மாத இதழ் மற்றும் தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | வெளியீடு செய்த நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலை மலர் (தீபாவளி மலர்) | 13.11.2020 | 9975/– |
| 2 | மக்கள் குரல் | 13.11.2020 | 6300/– |
| 3 | செய்தி அலசல் | 20.11.2020 | 4100/– |
| 4 | தேசிய மக்களாட்சி (மாத இதழ்) | 15.07.2020 | 27825/– |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மாவட்ட ஆட்சித்தலைர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரையின்பேரில், மேற்படி விளம்பரம் மேற்கொள்ளப்பட்ட செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 281</u>**

**<u>பொருள் : 5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண்.12–ல் உள்ள நாயக்கனூர் பகுதியில் கஸ்தூரி நகர் முதல் நாயக்கனூர் பகுதி முடிய உள்ள சாலையின் புல எண்.546 மற்றும் 529 ஆகிய எண்களில் இருபுறத்தில் ஆக்கிரமிப்பு புகார் தொடர்பாக நில அளவை மேற்கொண்டு அத்துமால் செய்யவும் அப்பகுதியில் உள்ள புல எண்.539/2–ம் நடைபெற்ற வழக்கில் சார்பு நீதிமன்றம், பழனி AS 46/2016 தீர்ப்பு நாள்.07.11.2019 நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை வரப்பெற்றதை தொடர்ந்து, மேற்படி குளத்தினை வட்டாட்சியர், ஒட்டன்சத்திரம் அவர்கள் மூலம் நில அளவை செய்து அத்துமால் செய்த இடங்களில் கூலி ஆட்கள் மூலம் அளவுக்கல் நடும் பணிகள் மேற்கொண்டமைக்காக கல் கிரையம் மற்றும் கூலி முதலானவைகளுக்காக எம்.எம்.கே.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.11,632/–ஐ மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, எம்.எம்.கே.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் மூலம் நடவுக்கல் கொள்முதல் செய்து பணிகள் மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 282</u>**

<u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.28.12.2020 (திங்கள் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 28.12.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் ஈப்பு வாகன எண்.TN 57 AW 2867 மற்றும் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண்.TN 57 AW 4037 ஆகிய இரண்டு ஈப்பு வாகனத்திற்கும் காப்பீடு காலம் **27.12.2020** மற்றும் **09.01.2021** உடன் முடிவுறும் நிலையில் உள்ளதால், மேற்படி ஈப்பு வாகனங்களுக்கு காப்பீடு புதுப்பிக்க Royal Sundaram General Insurance Co.Limited, Chennai நிறுவனத்தினடமிருந்து கீழ்க்காணும் பட்டியலில் உள்ளவாறு வரப்பெற்ற காப்பீடு கேட்பு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | ஈப்பு வாகன எண் | காப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | TN 57 AW 2867 | **18610/–** |
| 2 | TN 57 AW 4037 | **14939/–** |
| | மொத்தம் | **33549/–** |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. ஈப்பு வாகனங்களின் காப்பீட்டின் அவசியம் கருதி, பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 283**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகன எண்.TN 57 AW 4037–ல் பேட்டரி பழுதடைந்ததை தொடர்ந்து, மேற்படி ஈப்பு வாகனம் பயன்படுத்த இயலாத நிலையுள்ளதால், ஸ்ரீ கார்த்திகேயன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து, ஈப்பு வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கி பொருத்தியமைக்காக நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.**6,800/–**ஐ மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி, மேற்படி வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கி பொருத்தியமைக்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 284**

**பொருள் : 3**

தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் நாள் ஒன்றுக்கு சேகாரமாகும் விற்பனை செய்ய இயலாத, எளிதில் தீப்பிடிக்கக் கூடிய உலர் கழிவுகளை எரியூட்டும் வகையில், தினமும் சேகாரமாகும் உலர் கழிவுகளை பழனி நகராட்சியில் அமைக்கப்பட உள்ள எரியூட்டும் மையத்திற்கு அனுப்பவும், மேற்குறித்த எரியூட்டும் மையத்திற்கான கட்டுமானம், இயக்குநர் மற்றும் பராமரிப்பு செலவினத்தினை ஒட்டன்சத்திரம் நகராட்சி பகிர்ந்து கொள்ளவும் உரிய மன்ற அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் சேகாரமாகும் **7.50** மெட்ரிக் டன் உலர் கழிவுகளை பழனி நகராட்சியில் அமைக்கப்படவுள்ள எரியூட்டும் மையத்திற்கு அனுப்பவும், அவ் எரியூட்டும் மையத்திற்கான கட்டுமான செலவு, இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினத்தினை **15**வது நிதிக்குழு பரிந்துரை நிதியின் மூலம் பகிர்ந்துகொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Name of the Municipality | Dry Waste (Non saleable (TPD) | Percentage of the dry waste qty (%) | Proportionate Cost (Rs.in lakhs) | Funds available under tied up grant per instalment | Total tied up grant available (Rs.in lakhs) |
|---|---|---|---|---|---|
| Oddanchatram | 7.50 | 19.56 | 93.00 | 1.52 | 94.52 |

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி தோராய செலவின பங்குத் தொகையினை 15வது நிதிக்குழு பரிந்துரை மானிய நிதியின் மூலம் பகிர்ந்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 285**

**பொருள் : 4**

அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.19.09.2008–ன்படி நகராட்சியில் கீழ்க்காணும் இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.201 முடிய மூன்று ஆண்டுகளுக்கு சுங்க கட்டண வசூலுக்கான குத்தகை உரிமை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு 31.03.2021 நாளுடன் மூன்று ஆண்டுகள் முடிவுறுவதால் மேற்படி இனங்களுக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கான குத்தகை உரிமைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கு.

| வ. எண் | இனங்கள் | குத்தகை ஒப்படைக்கப்பட்ட நாள் | குத்தகை முடிவுறும் நாள் | குத்தகை காலம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | காந்தி தினசரி சந்தையில் காய்கறிகளுக்கான சுங்க வசூல் செய்யும் குத்தகை உரிமை. | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 2. | ஞாயிற்றுக்கிழமை கூடும் வாரச்சந்தையில் மாடு, எருமை மற்றும் கன்றுக்குட்டிகளுக்கான சுங்க வசூல் செய்யும் குத்தகை உரிமை. | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 3. | வியாழக்கிழமை கூடும் வாரச்சந்தையில் ஆடு, கோழி மற்றும் தோல் ஆகியவைகளுக்கு சுங்க வசூல் செய்யும் குத்தகை உரிமை. | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 4. | காந்தி மார்க்கெட்டில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமை | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 5. | பேருந்து நிலையத்தில் தட்டு மூலம் முறுக்கு விற்பனை செய்யும் குத்தகை உரிமை. | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 6. | பேருந்து நிலையத்தில் தட்டு மூலம் இஞ்சி மிட்டாய் விற்பனை செய்யும் குத்தகை உரிமை. | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 7. | பேருந்து நிலையத்தில் தட்டு மூலம் பழங்கள் விற்பனை செய்யும் குத்தகை உரிமை. | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 8. | திண்டுக்கல் பழனி சாலை கி.மீ. 129/0 முதல் 130/0 முடிய, கி.மீ. 130/0 முதல் 131/0 முடிய மற்றும் கி.மீ. 131/0 முதல் 133/0 முடிய (தேசிய நெடுஞ்சாலை) உள்ள புளிய மரங்களின் மேல் மகசூல் பலன் குத்தகை உரிமை. (I R) | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |
| 9. | அலுவலக வளாகம் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள தென்னை மற்றும் இலவம் மரங்களின் மேல் மகசூல் உரிமை | 01.04.2018 | 31.03.2021 | 3 ஆண்டுகள் |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி இனங்களுக்கான குத்தகை உரிமையினை அரசாணையின்படி 31.03.2021 நாளுடன் மூன்றாண்டுகள் முடிவுறும் நிலையில், மேலும் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 286**

**பொருள் : 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குச் சொந்தமான காந்தி தினசரி சந்தை நிலம் ஆர்ஜிதம் செய்து நீதிமன்ற தீர்ப்புரைகளின்படி, அதன் உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் மூலம் வழங்கப்பட்ட தொகை குறைவாக உள்ளதாக ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் தும்மிச்சம்பட்டி புதூரில் வசிக்கும், 1. கஸ்தூாி ரெட்டியாா் மகன் முத்துராமகிருஷ்ணன் (இறப்பு) 2. மேற்படி விலாசத்தில் வசிக்கும் கோதண்டராம ரெட்டியாா் மகன் திருமலைசாமி 3.ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் கஸ்தூாி நகா் 110/1–12ல் வசிக்கும் திரு. லேட் முத்துராமகிருஷ்ணன் என்பவாின் மகன் கஸ்தூாி கிருஷ்ணன் ஆகியோரால் பழனி சாா்பு நீதி மன்றத்தில் E.P.No.160/2008 in LAOP No.3/1996 மற்றும் O.S.No.105/2010 நாள்.16.07.2012ல் வழக்கு தாக்கல் செய்யபப்பட்டதை எதிா்த்து நகராட்சியால் மேல்முறையீடு செய்யப்பட்ட E.A.No.252/2012 மனு பழனி சாா்பு நீதி மன்ற நீதியரசா் அவா்களால் தள்ளுபடி செய்து தீா்ப்புரை வழங்கப்பட்டது.

மேற்படி தீா்ப்புரையினை எதிா்த்து சென்னை, உயா்நீதிமன்ற மதுரைக்கிளையில் நகராட்சி மூலம் மேல்முறையீடு செய்யப்பட்டு வழக்கு எண்.CRP(MD) No.914/2015 and MP(MD) No.1/2015 ன்படி, வழக்கு நடைபெற்று வந்த நிலையில், மேற்படி வழக்கின் மாண்பைமிகு.நீதியரசா் அவா்களால் நகராட்சிக்கு எதிராக வழங்கப்பட்ட தீா்புரையில் நில உரிமையாளா்களுக்கு இழப்பீட்டு தொகை ரூ.1,14,84,140/– மேற்படி தொகையினை செலுத்தும் நாள் முடிய 15 சதவீதம் வட்டியுடன் செலுத்துவதோடு, நீதிமன்ற கட்டணமாக ரூ.10,000/– செலுத்த தீா்ப்புரை வழங்கப்பட்டதை தொடா்ந்து, நகராட்சிக்கு பாதகமான இத்தீா்புரையினை எதிா்த்து சென்னை, உயா்நிதிமன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞா் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவா்கள் மூலம் புது தில்லி, இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி தீா்புரையினை எதிா்த்து புது தில்லி, இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீா்மானம் எண் – 287**

**பொருள் : 6**

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.03.07.2007–ன்படி நகராட்சியில் கீழ்க்காணும் இனங்களுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ள கோரப்பட்டு புதுப்பித்தல் நடைமுறைகளின்படி 01.04.2009 முதல் 31.03.2018 முடிய ஒன்பது ஆண்டுகள் உரிமம் வழங்கப்பட்ட நிலையில் மேற்படி இனங்களுக்கு 31.03.2018–ம் நாளுடன் உரிம காலம் முடிவுறும் நிலையில், அரசாணையின்படி நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களின் கடிதம் ந.க.எண்.15316/2016/ஆா்3 நாள்.30.11.2016–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி மேற்காணும் இனங்களுகளுக்கு புதுபித்து உரிமம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கு.

| வ. எண் | உரிம இனங்கள் | மொத்த இனங்களின் எண்ணிக்கை | உரிமம் ஒப்படைக்கப் பட்ட நாள் | உரிமம் முடிவுறும் நாள் | உரிம காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய புதிய கடை நடத்திக்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை உரிமம் | 2, 3, 4, 5 மற்றும் 12 | 01.04.2012 | 31.03.2021 | 9 ஆண்டுகள் |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி இனம் 9 ஆண்டுகால குத்தகை உரிமையினை அரசாணையின்படி 31.03.2021 நாளுடன் ஒன்பதாண்டுகள் முடிவுறும் நிலையில், அரசாணை மற்றும் நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படியும் மேற்காணும் இனங்களுக்கு புதுப்பித்து உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீா்மானம் எண் – 288**

**பொருள் : 7**

உள்ளாட்சி அமைப்புகளில் (நகராட்சி எல்லைக்குள்) எந்த ஒரு தொழிலும் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.249 மற்றும் 251–ல் வழிமுறை காட்டியபடி, நகராட்சியில் துணை விதிகள் உறுவாக்கி அதன்படி, உரிமையாணம் வழங்கப்பட்டு தொழில் நடத்திட அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒரு சில கடைகளுக்கு உரிமையாணம் பெறுவதில் விளக்கு அளிக்கப்படும். உதாரணம் (எளிதில் தீப்பிடிக்கக்கூடியது, சலூன் போன்றவை) தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 19.12.2020–ம் தேதிய கடிதத்தில் சலூன், அலகு நிலையம் மற்றும் மசாஜ் பார்லர் உரிமையணம் பெற்று நடத்திட வழிகாட்டுதலின்படி, செய்தி தாளில் வெளியிடவும், ஆட்சேபனை கோரவும் – அரசிதழ் வெளியிடவும், பின்னாளில் உரிமையாணம் வழங்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி விளம்பரம் மற்றும் செய்தி வெளியீடுகளுக்கு ஆகும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 289**

**பொருள் : 8**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா–2019 நோய் தொற்று தடுப்பு பணிக்களான நகர் பகுதி முழுவதும் கிருமி நாசினி தெளிப்பது நகராட்சி பணியாளர்கள் அனைவருக்கும் முக கசவம் மற்றும் கையுறை வழங்குதல் மற்றும் செனிடேசர் போன்ற அத்தியாவசிய உபகரணங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் கொரோனா விழிப்புணர்வு தொடர்பாக பேனர்கள் வைத்தல் மற்றும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்ட பகுதிகளில் டின் சீட் கொண்டு அடைப்பது மற்றும் மருத்துவ பரிசோதனை நடத்துவது போன்ற அத்தியாவசிய பணிகள் 1 /2021 மாதத்திற்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.50 இலட்சம் தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரம் பொதுமக்களின் நலன் கருதி, மேற்படி அத்தியாவசிய நோய் தொற்று தடுப்பு பணிக்கு நிர்வாக அனுமதி பெற்று, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 290**

<u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.31.12.2020 (வியாழக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 31.12.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் வட்டம் ஒட்டன்சத்திரம் கிராம கணக்கில் புல எண்.692—ல் அமைந்துள்ள அருள்மிகு குழந்தைவேலப்பர் திருக்கோவில் மலைப்பாதையை சுற்றி நடைபாதை அமைத்து மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் பணிகள் விழுதுகள் தன்னார்வ அமைப்பு மூலம் மேற்கொள்ளவுள்ளதாகவும், அதன்படி அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோவில் மலைப் பகுதியை சுற்றிலும் சாலை அமைத்து மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க நகராட்சி எல்லைக்குள் உள்ள அரசு புறம்புகல் இடங்களில் பணிகள் மேற்கொள்ள அனுமதி கோரி வட்டாட்சியர், ஒட்டன்சத்திரம் அவர்களின் கடித ந.க.எண்.5003/2020/4, நாள்.30.12.2020 —ல் வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. அருள்மிகு குழந்தைவேலப்பர் திருக்கோவில் மலைப் பகுதியினை சுற்றி பொதுமக்கள் நலன் கருதி, தன்னார்வ அமைப்பு மூலம் நடைபாதை அமைத்து மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் — 291**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஊரடங்கு இல்லாத நிலையில் தினமும் சேகரம் செய்யும் 15 மெட்ரிக் டன் திடக்கழிவுகளில் 6 டன் மக்கும் குப்பையாகவும், 2 டன் பிளாஸ்ட்டிக், 2 டன் மண் கழிவு வகையும் பிரிக்கப்பட்ட நிலையில், Mixed waste (கலவை குப்பையாக) 5 டன் முறைப்படுத்த உரக்கிடங்கு இல்லாத நிலையில், தனியாருக்கு சொந்தமான இடத்தில் அவர்களின் அனுமதியுடன் கொட்டி 2 நாளுக்கு ஒரு முறை ஜெ.சி.பி மூலம் ஒழுங்கு செய்து பின் டிப்பர் லாரி மூலம் மண் ஓட்டி மூடிக்கொடுக்கப்படும். இதற்காக ஜெ.சி.பி (JCB) வாகனம் மற்றும் டிப்பர் லாரி மண் வாடகைக்கு அமர்த்திக்கொள்ளவும், 6 மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் — 292**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வழியாக பழனி பாலதண்டாயுதபாணி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா 2021—ம் ஆண்டு 28.01.2021—ம் நாள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து, நகராட்சி வழியாக பாதையாத்திரை பக்தர்கள் அதிகளவில் செல்வதால், பாதையாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேணல் பந்தல், தற்காலிக கழிவறை, பொதுசுகாதார பயன்பாட்டிற்கான கிருமி நாசினிகள் கொள்முதல் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு தட்டிகள் முதலான பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான உத்ததேச செலவினம் ரூ.6.20 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

3. அனுமதிக்கலாம்.
4. பழனி பாதையாத்திரை பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளின் அவசியம் கருதி, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் — 293**

**<u>பொருள் : 4</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் **2020–21** ஆண்டுக்கான **01.12.2020** முதல் **31.12.2020** முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0446 முதல் RF0494 முடிய, WS0082 முதல் WS0086 முடிய மற்றும் TFV043 முதல் TFV050 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்

**<u>தீர்மானம் எண் – 294</u>**